DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : சம்சுதீன் | Father/Husband Name : மைதீன் |
| Age : 21 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : டீக்கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5 May 2026 13:13

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தூர் மாரியம்மன் கோவில் அருகிலுள்ள டீக்கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி முத்து என்பவரை எனக்கு தெரியும் அவர் இறந்துவிட்டார்.

2. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் 3 நபர்கள் கொத்தனார் வேலைக்கு பயன்படுத்தும் கம்பிகளை ஒரு சாக்கில் கட்டி வைத்து நான் மேற்கூறிய டீக்கடைக்கு வந்து டீ சாப்பிட்டுவிட்டு அவர்கள் வந்திருந்த இரு இருசக்கர வாகனங்களில் சென்றார்கள். நானும், முத்து என்பவரும் அவர்கள் மீது சந்தேகப்பட்டு இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்தோம். கோபாலபுரத்தில் வைத்து காலை 09.30 மணியளவில் அந்த நபர்கள் என்னை தாக்கினார்கள். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியாது. எங்களை தாக்கிவிட்டு சென்றுவிட்டார்கள். பின்னர் சிறிது நேரத்தில் போலீசார் எங்கள் டீ கடைக்கு வந்து கம்பி களவு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

3. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னிடம் சாட்சிக்காக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. <u>**(பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**</u> போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(***அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது***)

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u> –

4. கடந்த 05.09.2019ம் தேதி காலை 08.30 மணிளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்த்து தயார் செய்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**</u> இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur

// True copy // P.P

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : காளிராஜ் | Father/Husband Name : முருகன் |
| Age : 25 | Village : ரெங்கநாயக்கன்பட்டி காலனி, |
| Taluk : | Calling : கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5 May 2026 13:22

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் ரெங்கநாயக்கன்பட்டி காலனியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னர் சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் போலீசார் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆகவும், அத்தாட்சியில் உள்ள சாட்சியின் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(***அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது***)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** -

3. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த ஆவணத்தையும் அதன் உள்டக்கத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன்.

4. கடந்த 05.09.2019ம் தேதி 11.30 மணியளவில் இவ்வழக்கின் எதிரி முருகேசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அதை தொடர்ந்து வழக்கு சொத்தினை போலீசார் கைப்பற்றும் போது தயார் செய்த அத்தாட்சியிலும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

5 May 2026 13:25

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur

// True copy // P.P

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரியப்பன் | Father/Husband Name : பெருமாள் |
| Age : 52 | Village : அமீர்பாளையம் |
| Taluk : | Calling : ஆட்டோ ஓட்டும் தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5 May 2026 13:28

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>முதல் விசாரணை</u>** :–

1. நான் அமீர்வாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2019 ஆம் ஆண்டு சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் போலீசார் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. **<u>(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 5 ஆகவும், அத்தாட்சியில் உள்ள சாட்சியின் இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.</u>** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(***அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது***)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>** –

3. எந்த ஆவணத்தையும் அதன் உள்டக்கத்தை படித்து பார்க்காமல் கையெழுத்து செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன்.

4. கடந்த 05.09.2019ம் தேதி 11.30 மணியளவில் இவ்வழக்கின் எதிரி முருகேசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அதை தொடர்ந்து வழக்கு சொத்தினை போலீசார் கைப்பற்றும் போது தயார் செய்த அத்தாட்சியிலும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

5 May 2026 13:27

(Sd/-S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur

// True copy // P.P